சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

அமர்வு வழக்கு எண் 42/2020

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 10 (lw 14) | நாள் | 09.08.2324 |
| பெயர் | ராஜாராமன் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் ஓய்வு |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 42 |

(எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் சீர்காழி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 2020 ல் ஓய்வு பெற்றேன். 2016 வது வருடம் திருவெண்காடு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன். திருவெண்காடு காவல் நிலைய குற்ற எண். 100/2016 ல் சம்பந்தப்பட்ட வழக்கின் தடயபொருட்களான Pistol - 1 , அதன் குண்டுகள் - 2, நாட்டு வெடிகுண்டு - 2 ஆகியவற்றை 01.11.2016 அன்று சீர்காழி நடுவர் நீதிமன்றத்திலிருந்து பெற்று சென்னை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்புவித்து நிலையம் வந்து அறிக்கை செய்து கொண்டேன். பிறகு 18.01.2017 அன்று திருவெண்காட்டிலிருந்து சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு 09.01.2017 அன்று சென்று அங்கிருந்து தடயத்தின் ஆய்வறிக்கை மற்றும் தடயபொருட்களை ஆய்விற்கு பிறகு பெற்று 20.01.2017 அன்று சீர்காழி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். நீதிமன்றத்தில் உள்ள தடயப்பொருட்களான Pistol - 1 , அதன் குண்டுகள் - 2, செயலிழக்க செய்த நாட்டு வெடிகுண்டு - 2 ஆகியவை நான் சென்னை தடய ஆய்வகத்திலிருந்து பெற்று வந்து சீர்காழி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஒப்படைத்தவைதான். இந்த வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் காவல் ஆய்வாளர் பதிவு செய்த பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.